# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 13.07.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 9910/SCIC/2024</u>**

Ms. BHAVANI - மேல்முறையீட்டாளர்
No.7/1, Annai Indira Gandhi Street
Bhagyalakshmi Nagar, Maduravoyal Errikarai
CHENNAI - 600 095. கைபேசி.8925407368

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
சென்னை பெருநகரக் காவல்
கோயம்பேடு காவல் மாவட்டம்
மதுரவாயல், சென்னை-600 095.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **27.05.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.06.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 30.07.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 27/05/2024 நாளிட்ட மனுவை The Public Information Officer, T4 Police Station, Maduravoyal, Poonamallee High Road, Chennai-95 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Please share with me a copy of FIR No.514 of 2023 registered in your good office against me” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Ms.BHAVANI அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், Dr.M.S.பாஸ்கர், காவல் உதவி ஆணையாளர், விருகம்பாக்கம் சரகம், கோயம்பேடு காவல் மாவட்டம் அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி

8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 17/09/2025 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, ஏற்கனவே தொடர்புடைய குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பூந்தமல்லி-யில் 08/11/2024 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாகக் கூறி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பூந்தமல்லி சம்பந்தப்பட்ட நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். குற்றப் பத்திரிகை 08/11/2024 தேதியன்றே தாக்கல் செய்திருந்தாலும், மனுதாரருக்கு 17/09/2025 தேதியிட்ட பதிலில் - பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், கோயம்பேடு காவல் மாவட்டம் அவர்கள் கு.எண்.514/2023 வழக்கானது புலன் விசாரணையில் இருந்தபடியால், முதல் தகவல் அறிக்கையின் நகல், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 8(1)(h)-ன்படி அளிக்கப்படவில்லை என 17/09/2025 தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். **இன்று பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதியிடம் மேற்சொன்ன முரண்பாடு குறித்து ஆணையம் விசாரணை மேற்கொண்ட போது, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பூந்தமல்லி-யில் 08/11/2024 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதை உறுதி செய்தார். எனினும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் 17/09/2025 தேதியிட்டு மனுதாரருக்கு அளித்த பதில் குறித்து எவ்வித கருத்தும் அவரால் தெரிவிக்க இயலவில்லை. எப்போதும் மனுதாரருக்கு தகவல் அளிக்கிற போது, பொதுத் தகவல் அலுவலர் உண்மையான நிலையினை உறுதி செய்த கொண்ட பின்னரே தகவல் அளிக்க வேண்டும் என்றும் எனவே, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களை ஆணையம் எச்சரிப்பதோடு, இனி வருங்காலங்களில் மனுதாரருக்கு தகவல் அளிக்கிற போது மிகுந்த கவனத்தோடு செயலாற்றிட வேண்டும் என்றும் தவறும் பட்சம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, ஆணையத்தின் நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 9910/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
சென்னை பெருநகரக் காவல்
கோயம்பேடு காவல் மாவட்டம்
மதுரவாயல், சென்னை-600 095.

<u>மேல்முறையீட்டாளர்</u>

Ms. BHAVANI
No.7/1, Annai Indira Gandhi Street
Bhagyalakshmi Nagar, Maduravoyal Errikarai
CHENNAI - 600 095.
**கைபேசி**.8925407368

RG/Sr.PC